**ஓய்வூதியச் சுற்றுநிருபம்: 03/2016**

எனது இலக்கம்: ஓய்வூ/சுற்றுநிருபம்/2016
ஓய்வூதியத் திணைக்களம்,
மாளிகாவத்தை,
கொழும்பு 10.
27-04-2016.

அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்/ முப்படைத் தளபதிகள்,
மாவட்டச் செயலாளர்கள்/ உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள்,
பிரதேச செயலாளர்களிற்கு,

**01-01-2016 ஆந் திகதியின் பின்னர் ஓய்வு பெறும் அரச உத்தியோகத்தர்களின் ஓய்வூதியங்களைச் சீராக்குதல்.**

பொதுச் சேவையின் சம்பள மீளாய்வுகள் 2016 எனும் தலைப்பில் 25-02-2016 ஆந் திகதி கொண்டு வெளியிடப்பட்ட பொது நிர்வாகச் சுற்றுநிருபம் 03/2016 மீது தங்களது கவனத்தினைத் திருப்புகின்றேன்.

02. அச் சுற்றுநிருபத்தின் 05 ஆம் பந்தியில் குறிப்பிடப்படும் வண்ணம் 01-01-2016 ஆந் திகதியின் பின்னர் ஓய்வு பெறும் அரச உத்தியோகத்தர்களின் ஓய்வூதியத்தினை மீளாய்வு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஓய்வு பெறும் அரச உத்தியோகத்தர்களின் **ஓய்வூதியங்களைத் தயாரிப்பதற்குக் குறித்த சுற்றுநிருபத்தின் உப அட்டவணை II இல் குறிப்பிடப்படும் சம்பளப் படிநிலையினை இறுதியாகப் பெற்ற சம்பளப் படிநிலையெனக் அடிப்படையாகக் கொள்ளுதல் வேண்டும்.**

03. அச் சுற்றுநிருபத்தின் உப அட்டவணை I இல் குறிப்பிடப்படும் சம்பளப் பரிமாணங்களைப் பெற்றுக் கொடுத்தலானது 01-01-2020 ஆந் திகதி முதலேயே பூரணமாகச் செயற்படுத்தப்படும். **அத் திகதியில் ஓய்வூதியம் மீளாய்வு செய்யப்படுவதுடன், அது பற்றிய அறிவுறுத்தல்கள் பொது நிர்வாகச் சுற்றுநிருப இலக்கம் 03/2016 இன் 05:2 இன் அடிப்படையில் பின்னர் வெளியிடப்படும்.** அவ்வாறே 01-01-2016 முதல் 31-12-2019 வரையிலான காலப் பகுதியினுள் ஓய்வூதியம் மீளாய்வு செய்யப்பட மாட்டாது. 2016, 2017, 2018, 2019, 2020 எனும் வருடங்களினுள் ஓய்வு பெறுகின்ற உத்தியோகத்தர்களுக்கு அவர்கள் இறுதியாகப் பெற்றுக் கொண்ட சம்பளத்தினை அடிப்படையாகக் கொண்டு ஓய்வூதியத்தினைத் தயாரிக்க வேண்டியதுடன், அதற்காக அவ் அவ் வருடங்களுடன் ஏற்புடைய வண்ணம் வெளியிடப்பட்டுள்ள சதவீத அட்டவணைகளைப் பயன்படுத்துதல் வேண்டும். **(இணைப்பு I)**

04. ஓய்வூதியக் கொடையளிப்பின் பொருட்டு அடிப்படையாகக் கொள்ளும் கொடைப்பத்திரம் (திறைசேரி 79) **(இணைப்பு II)** மற்றும் PD 03 **(இணைப்பு III)** மாதிரிப்படிவம் என்பன பொது நிர்வாச் சுற்றுநிருப இலக்கம் 3/2016 இற்கு ஏற்பத் திருத்தியமைக்கப்பட்டுள்ளதுடன், ஓய்வூதியத் திணைக்கள இணையத் தளத்திலிருந்து அவற்றினைப் பதிவிறக்கிக் கொள்வதற்கான வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இம் மாதிரிப்படிவங்கள் 01-01-2016 ஆந் திகதி முதல் 31-12-2019 வரையிலான காலப்பகுதியினுள் ஓய்வு பெறுகின்ற உத்தியோகத்தர்கள் தொடர்பில் மட்டுமாவதுடன், 01-01-2020 முதல் மீளவும் திருத்தியமைக்கப்பட்ட கொடைப்பத்திரம் **(திறைசேரி 79)** மற்றும் PD 03 மாதிரிப்படிவத்தினைப் பயன்படுத்த முடியும்.

05. 01-01-2016 முதல் 31-12-2019 வரையில் ஓய்வு பெறுகின்ற உத்தியோகத்தர்கள் தொடர்பில் பயன்படுத்தப்பட வேண்டிய **திறைசேரி 79 இல் குறிப்பிடப்படும் VIII, IX, X எனும் பந்திகளைச் சரியாகப் பூரணப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.** அதாவது VIII ஆம் பந்தியில் பூரணச் சம்பளப் பரிமாணத்தினைக் குறிப்பிட வேண்டியதுடன், IX பந்தியில் 01-01-2020 ஆந் திகதியில் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டிய சம்பளப் படிநிலையினைக் குறிப்பிடுதல் வேண்டும். X ஆம் பந்தியில் உத்தியோகத்தர் ஓய்வு பெறும் திகதியில் ஏற்புடைய சம்பளப் படிநிலையினைக் குறிப்பிடுதல் வேண்டும்.

06. 01-01-2016 ஆந் திகதியின் பின்னர் ஓய்வு பெற்றுத் தற்சமயமாகுகையில் ஓய்வூதியத்தினைப் பெறுகின்ற உத்தியோகத்தர்களது ஓய்வூதியத்தினை மீளாய்வு செய்யும் பொருட்டிலான PD 06 மாதிரிப்படிவங்களை 30-06-2016 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும். அதற்காக 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்படும் சதவீத அட்டவணைகள் மற்றும் புதிய கொடைப்பத்திரத்தினைப் (திறைசேரி 79) பயன்படுத்துதல் வேண்டும்.

07. 11-02-2015 ஆந் திகதி கொண்ட பொது நிர்வாகச் சுற்றுநிருப இலக்கம் 5/2015 மூலம் மாதாந்தம் பெற்றுக் கொடுக்கப்பட்ட ரூ. 3,500.00 ஆன இடைக்காலக் கொடுப்பனவு 01-01-2016 ஆந் திகதியின் பின்னர் ஓய்வு பெறும் உத்தியோகத்தர்களுக்குக் கிடைக்கப் பெற மாட்டாது. 01-01-2016 ஆந் திகதியின் பின்னர் ஓய்வு பெற்றுத் தற்சமயமாகுகையிலும் மீளாய்வு செய்யப்பட்ட ஓய்வூதியத்தினைப் பெற்றிராத ஓய்வூதியர்களது ஓய்வூதியத்தினைத் தயாரிக்கையில் இது வரையில் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள இடைக்காலக் கொடுப்பனவான ரூ. 3500.00 இனைக் குறைத்து நிலுவை ஓய்வூதியங்களைச் சீர் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். 31-12-2013 ஆந் திகதி கொண்ட பொது நிர்வாகச் சுற்றுநிருப இலக்கம் 37/2013 மூலம் மாதாந்தம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள ரூ. 3,525.00 ஆன வாழ்க்கைப்படி தொடாந்தும் வழங்கப்படும்.

**08. இச் சுற்றுநிருபம் வெளியிடப்பட்ட திகதியின் பின்னர் இத்துடன் இணங்கா வண்ணம் ஓய்வூதியத்தினைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு ஓய்வூதியத் திணைக்களத்திடம் அனுப்பப்பட்ட விண்ணப்பங்களை மீளவும் குறித்த நிறுவனங்களிடத்தே திருப்பி அனுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், திருத்தியமைக்கப்பட்ட விண்ணப்பங்களை மீளவும் ஓய்வூதியத் திணைக்களத்திடம் அனுப்புதல் வேண்டும்.**

09. பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் இணக்கப்பாட்டின் கீழ் இச் சுற்றுநிருபம் வெளியிடப்படுகின்றது.

**(ஒப்பம்)**
**ஏ. ஜகத் டி. டயஸ்,**
**ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்.**

பிரதிகள்

| | | |
|---|---|---|
| 1. | சனாதிபதி செயலாளர் | - தயவு மிகு தகவலுக்காக |
| 2. | பிரதமரின் செயலாளர். | - தயவு மிகு தகவலுக்காக |
| 3. | அமைச்சரவையின் செயலாளர். | - தயவு மிகு தகவலுக்காக |
| 4. | செயலாளர் | - பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு |
| 5. | செயலாளர் | - நிதி அமைச்சு |
| 6. | செயலாளர் | - பொதுச் சேவைகள் ஆணைக்குழு |
| 7. | செயலாளர் | - தேசிய சம்பளங்கள் ஆணைக்குழு |
| 8. | கணக்காய்வாளர் நாயகம் | - தகுந்த நடவடிக்கைகளுக்காக |